**<u>In the court of the Additional Subordinate Judge, Tenkasi.</u>**

<u>Deposition of Witness</u>

Mcop 51/2023

**ம.சா1 முருகன்**

| | |
|---|---|
| Name | : முருகன் |
| Father's name | : |
| Village | : |
| Taluk | : |
| Occupation | : |
| Age | : |
| Date | : 04.02.2026 |

சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை நிரூபண வாக்குமூலம் தாக்கல்

நான் இந்த மனுவில் மனுதாரர். என்னுடைய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் சரியானது தான். அதிலுள்ளது எனது கையெழுத்து தான்.

1. 28.10.2022ம் தேதியிட்ட புளியரை காவல்நிலைய குற்ற எண். 201/2022 வழக்கின் முதல் தகவல் அறிக்கை ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ 1.

2. 28.10.22 தேதியிட்ட என்னுடைய விபத்து பதிவேடு மற்றும் மருத்துவ விடுவிப்பு சான்று எண்ணம் 4 ம.சா.ஆ 2 வரிசை

3. 14.03.2023 தேதியிட்ட ரூ.89,050/—க்குரிய மருத்துவ பில்கள் எண்ணம் 2 அசல் ம.சா.ஆ 3

4. 20.02.2022ம் தேதியிட்ட எதிர்மனுதாருக்கு பாத்தியப்பட்ட டி.என்.45.பிஏ.1095 என்ற வாகனத்தின் காப்பீடு சான்று ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ 4

5. என்னுடைய ஓட்டுனர் உரிமம் ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ 5

6. 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுனர் உரிமம் ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ 6

7. என்னுடைய ஆதார் அடையாள அட்டை மற்றும் வங்கி புத்தகம் ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ 7. மனுபடி உத்தரவாக வேண்டுகிறேன்.

3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

நான் முன்பு ஓட்டுனராக பணிபுரிந்தேன். நான் என்ன வாகனம் ஓட்டிகொண்டு இருந்தேன் என்றால் அசோக்லைலண்ட் லாரி ஓட்டினேன். விபத்து புளியரை எஸ்.வளைவில் வைத்து நடந்தது என்றால் சரிதான். விபத்து நடந்த பகுதி வளைவான பகுதி என்றால் சரிதான். அந்த பகுதியில் வாகனங்கள் எப்போதும் மெதுவாக செல்லும் என்றால் சரிதான். விபத்து சமயம் எதிரே வந்த லாரியானது இடதுபக்கமாக வந்தது என்றால் சரிதான். நான் தான் வேகமாகவும், அஜாக்கிரதையாகவும் சென்று விபத்தை ஏற்படுத்தி கொண்டேன் என்றால் சரியல்ல. நான் மேலே ஏறி சென்றுகொண்டிருந்தேன். லாரி கீழே வந்து கொண்டிருந்தது. அப்போது விபத்து நடந்தது. விபத்து சம்பந்தமாக நான் லாரி டிரைவர் மீது பொய்யான புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. விபத்திற்கு என் அஜாக்கிரதையும், கவனக்குறைவு காரணம் என்றால் சரியல்ல. விபத்து சம்பந்தமாக மாதிரிவரைபடம், குற்ற இறுதியறிக்கை, பார்வைமகசர் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தற்போது நான் ஓட்டுனராக பணிபுரிகிறேன் என்றால் இல்லை. நான் தற்போது ஓட்டுனர் இருந்து வருகிறேன் என்றும், எனக்கு வருமான இழப்பு எதுவும் இல்லை என்றால் சரியல்ல. விபத்து சமயம் நான் ஓட்டுனராக இருந்ததற்கான எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு கனரக வாகனத்தை ஓட்டுவதற்கு ஓட்டுனர் உரிமம் இல்லை என்றால் சரிதான். இலகுரக வாகனங்களை ஓட்டுவதற்கு ஓட்டுனர் உரிமம் உள்ளது. நான் மாத வருமானம் ரூ.25 ஆயிரம் பெற்று வந்ததற்கு எந்த ஆவணமும்

தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்திற்கு பிறகு செங்கோட்டை அரசு மருத்துவமனையிலும், தென்காசி அரசு மருத்துவமனையிலும் சிகிச்சை எடுத்து கொண்டேன். அதன் பின்னர் திருநெல்வேலி அரசு மருத்துவமனையிலும்,அதன்பின்னர் செங்கோட்டை சாந்தி நிகேதா மருத்துவமனையிலும் சிகிச்சை எடுத்து கொண்டேன். திருநெல்வேலி மருத்துவமனையில் 21 நாட்கள் சிகிச்சை எடுத்தேன். எனக்கு நிரந்தர ஊனம் ஏற்படும் அளவிற்கு காயம் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு எலும்பு முறிவு இல்லை என்றால் சரியல்ல. உள்ளது. நான் சிகிச்சை எடுத்தற்கான ஆவணம் எதுவும் முறையாக தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள மருத்துவ பில்களில் கண்ட தொகை அதிகமானது என்றால் சரியல்ல. விபத்திற்கு பிறகு எனக்கு எந்த வருமான இழப்பும்ஏற்படவில்லை என்றும், தற்போதும் ஒட்டுனராக பணிபுரிந்து வருகிறேன் என்றால் சரியல்ல. விபத்தானது என் கவனக்குறைவாலும், அஜாக்கிரதையாலும் மட்டுமே ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு தொகை கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல.

(ஒம்)எஸ். முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.